பொது அறிவு: வாஸ்கோடகாமா 1498-ம் ஆண்டு மே 20-ம் தேதி இந்தியா வந்தடைந்தார். போர்ச்சுக்கலைச் சேர்ந்த இவர், கடல் வழியாக இந்தியாவுக்கு வந்த முதல் ஐரோப்பியர் ஆவார். இவர் கேரளாவில் உள்ள கோழிக்கோடு கடற்கரையில் தனது கப்பலை நிறுத்தினார்.



தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகம் கடந்த 2013-ம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழகத்தில் உள்ள அனைத்து இசைக் கல்லூரிகளும் இப்பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. இதன் வேந்தர் தமிழக முதல்வர் ஆவார்.

### புற்றுநோய் உள்ளிட்ட ஏராளமான நோய்களை ஏற்படுத்தும்

# குப்பை எரி உலை திட்டத்தை கைவிட வேண்டும்

### அன்புமணி வலியுறுத்தல்

**சென்னை**

கீரப்பாக்கம் குப்பை எரிஉலை திட்டத்தை கைவிட வேண்டும் என்று, பாமக தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை:

சென்னையை அடுத்த வண்டலூர்-கேளம்பாக்கம் நெடுஞ்சாலையில் கீரப்பாக்கம் கிராமத்தில் குப்பை எரி உலைத் திட்டத்தையும், அதனுடன் இணைந்த நிலம் நிரப்பு திட்டத்தையும் செயல்படுத்த திமுக அரசு முடிவு செய்துள்ளது. புற்றுநோய் உள்ளிட்ட ஏராளமான நோய்களை ஏற்படுத்தும் குப்பை எரி உலைத் திட்டங்களை எதிர்ப்பையும் மீறி ஸ்டாலின் அரசு செயல்படுத்தத் துடிப்பது கண்டிக்கத்தக்கது.

மேலை நாடுகளில் குப்பை எரி உலைகளுக்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. தீமைகள் இருந்தும் கூட குப்பை எரி உலைகளை அமைக்க திமுக அரசு துடிப்பதன் நோக்கம், அதற்கான ஒப்பந்தங்களை வழங்குவதன் மூலம் ஆட்சியாளர்களுக்கு கிடைக்கும் பல கோடி ரூபாய் கையூட்டும், இன்னும் பல வெகுமதிகளும் தான்.

புற்றுநோய் உள்ளிட்ட ஏராளமான நோய்களை ஏற்படுத்தும் குப்பை எரி உலைகளை அமைக்க துடிப்பதை மன்னிக்க முடியாது. எனவே, கீரப்பாக்கத்தில் குப்பை எரி உலை அமைக்கும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும். அதேபோல், சென்னை, கொடுங்கையூர் குப்பை எரி உலை திட்டம், பெருங்குடி எரி உலை திட்டம் ஆகியவற்றையும் கைவிட்டு, உச்ச நீதிமன்றம் உத்தரவின்படி, நகர்ப்புற திடக்கழிவு மேலாண்மை விதிகளின் கீழ், திடக்கழிவுகளை வகைப்பிரித்து மேலாண்மை செய்வதற்கு தமிழக அரசு முன்வர வேண்டும்.

குறிப்பாக, பூஜ்ஜிய குப்பை எனப்படும் குப்பையில்லா நகரங்கள் கோட்பாட்டை விரைந்து செயல்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் மக்களைத் திரட்டி மிகப் பெரிய அளவிலான அறப்போராட்டத்தை பாமக நடத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.

2021-25 காலக்கட்டத்தில், 17 லட்சத்துக்கும் அதிகமான இந்தியர்களுக்கு வளைகுடா நாடுகளில் குடியேற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 41% பேர் சவுதி அரேபியாவிலும் 24% பேர் ஐக்கிய அரபு அமீரகத்திலும் குடியேறியுள்ளனர்.

**17**
லட்சம்

---

### கடந்த 5 ஆண்டுகால திமுக ஆட்சியில்

# இந்தியாவின் விளையாட்டு தலைநகரம் தமிழகம்

## தமிழக அரசு பெருமிதம்

■ சென்னை

'கடந்த 5 ஆண்டுகால திமுக ஆட்சியில், இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழகம் உருவாகியுள்ளது' என தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: திமுக ஆட்சியில், இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக தமிழகம் உருவெடுத்துள்ளது. இளைஞர்களை ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுத்தவும், சிதறிக்கிடக்கும் இளைஞர்களின் ஆற்றல்களைத் திரட்டவும், அவர்களை மனஉறுதி படைத்தவர்களாக உருவாக்கும் பெரும் பொறுப்பை நிறைவேற்றும் வகையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சிறப்பான பணிகளுக்கு தமிழக அரசு ஊக்கமளித்து வருகிறது.

திமுக அரசு சார்பில், 44-வது செஸ் ஒலிம்பியாட், சென்னை ஃபார்முலா-4 கார் பந்தயம், சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப், ஸ்குவாஷ் உலகக் கோப்பை, ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்பட்டு, உலகளவில் விளையாட்டு ஆர்வலர்கள் மத்தியில் தமிழகம் முக்கியமான விளையாட்டு களமாக மதிக்கப்படுகிறது.

விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமுடன் பங்கேற்கும் வீரர்களுக்கு பயிற்சிகள் பெற உதவித் தொகை, தங்கும் இடவசதி, போட்டிகளில் பங்கேற்க வெளி ஊர்களுக்கும் வெளி நாடுகளுக்கும் சென்றுவரும் பயணச் செலவு, வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளுக்குப் பரிசுகள், ஊக்கத்தொகைகள் அனைத்தும், போட்டிகளுக்கு ஏற்ப வழங்கப்படுகிறது.

சிறந்த வெற்றிகளை ஈட்டி தமிழகத்துக்கும், மத்திய அரசுக்கும் புகழ் தேடித்தரும் வீரர், வீராங்கனைகளுக்கு அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்களில் உயர் ஊதியத்துடன் பணி நியமனம் வழங்கப்படுகிறது. மூன்று சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் 5 ஆண்டுகளில் 70 மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட 301 விளையாட்டு வீரர்கள் அரசு, பொதுத்துறை நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அதே போல், சர்வதேச தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்கள் உட்பட 6,689 வீரர் வீராங்கனைகளுக்கு ரூ.215.78 கோடி ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை செம்மஞ்சேரியில் ரூ.261 கோடியில் உலகத் தரத்திலான விளையாட்டு நகரம் அமைக்கப்பட்டு வருகிறது. 234 தொகுதிகளிலும் தொகுதிக்கு ஒரு சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும் என அறிவித்து, 141 அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளுக்கும், 12,831 நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம், 'இந்தியாவின் விளையாட்டு தலைநகரம் தமிழகம்' என இன்று பெற்றுள்ள புகழ், நாளை 'உலகின் விளையாட்டுத் தலைநகரம் தமிழகம்' என்னும் பெருமையையும் புகழையும் ஈட்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# உலகளவில் ஆயுத இறக்குமதி இந்தியாவுக்கு 2-ம் இடம்

## சிப்ரி அறிக்கையில் தகவல்

**புதுடெல்லி**

உலகளவில் ஆயுதங்களை இறக்குமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 2-ம் இடத்தில் இருப்பதாக ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (சிப்ரி) ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா மற்றும் பாகிஸ்தான் எல்லைகளில் நிலவும் பதற்றமான சூழலே இந்தியா அதிக அளவில் ஆயுதங்களை வாங்கி குவிப்பதற்கு முக்கியக் காரணமாக கூறப்படுகிறது.

இதுகுறித்து அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 2016-20 காலகட்டத்தைவிட, 2021-25 காலகட்டத்தில் இந்தியாவின் ஆயுத இறக்குமதி 4% குறைந்துள்ளது. இருப்பினும், உலக ஆயுத இறக்குமதியில் இந்தியா 8.2% பங்குடன் இரண்டாமிடத்தில் உள்ளது. உக்ரைன் (9.7%) முதலிடத்தில் உள்ளது.

தற்சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் உள்நாட்டிலேயே ஆயுதங்கள் தயாரிப்பது அதிகரித்துள்ளதால் இறக்குமதி ஓரளவு குறைந்துள்ளது. இந்தியாவின் முதன்மை ஆயுத விநியோகஸ்தராக ரஷ்யா (40%) நீடித்தாலும், கடந்த 15 ஆண்டுகளில் ரஷ்யாவிடமிருந்து வாங்கும் அளவு பாதியாகக் குறைந்துள்ளது. தற்போது பிரான்ஸ் (29%) மற்றும் இஸ்ரேல் (15%) ஆகிய நாடுகளிடமிருந்து இந்தியா அதிக ஆயுதங்களைப் பெறுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# எம்.பி., எம்.எல்.ஏ.க்களில் 10% பேர் மட்டுமே பெண்கள்

## ஜனநாயக சீர்திருத்த சங்க அறிக்கையில் தகவல்

புதுடெல்லி

நாடு முழுவதும் உள்ள எம்.பி., எம்.எல்.ஏ.க்களில் 10% பேர் மட்டுமே பெண்கள் என ஜனநாயக சீர்திருத்த சங்க (ஏடிஆர்) ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 8-ம் தேதி மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு, 'இந்திய அரசியலில் பெண்களின் பங்கு மற்றும் பிரதிநிதித்துவம்' என்ற பெயரில் ஜனநாயக சீர்திருத்த சங்கம் (ஏடிஆர்) ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது. தேசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்ட அந்த ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது:

நாடு முழுவதும் உள்ள மொத்த எம்.பி.க்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் எண்ணிக்கை 4,666 ஆக உள்ளது. இதில் 10% (464) பேர் மட்டுமே பெண்கள்.

நாடாளுமன்ற (18-வது) மக்களவையில் உள்ள 543 எம்.பி.க்களில் 74 பேர் (14%) மட்டுமே பெண்கள். நாடு முழுவதும் 28 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன் பிரதேசங்கள் உள்ளன. இதில் 22-ல் மட்டுமே பெண்கள் எம்.பி.க்களாக உள்ளனர். பெண் எம்.பி.க்கள் இல்லாத மாநிலங்களில் கேரளாவும் இடம்பெற்றிருக்கிறது.

மேற்கு வங்கத்தில் அதிகளவாக 11, மகாராஷ்டிரா, உத்தர பிரதேசத்தில் தலா 7, மத்திய பிரதேசத்தில் 6 பெண்கள் எம்.பி.க்களாக உள்ளனர். கட்சிகளைப் பொருத்தவரை பாஜக 31 பெண்களுடன் முதலிடத்தில் உள்ளது. காங்கிரஸ் (13), திரிணமூல் காங்கிரஸ் (11) அடுத்தடுத்த இடத்தில் உள்ளன.

நாடு முழுவதும் உள்ள மாநில சட்டப்பேரவைகளில் 4,123 எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர். இதில் 390 (9%) மட்டுமே பெண்கள். உத்தர பிரதேசத்தில் அதிகளவாக 47 பெண் எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர். மேற்கு வங்கத்தில் 40, பிஹாரில் 29, மத்திய பிரதேசத்தில் 27 பெண் எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர். கட்சிகளைப் பொருத்தவரை 163 பெண்களுடன் பாஜக முதலிடத்தில் உள்ளது. காங்கிரஸ் (59), திரிணமூல் காங்கிரஸ் (34) அடுத்தடுத்த இடத்தில் உள்ளன.

கடந்த சில பத்தாண்டுகளாக தேர்தலில் போட்டியிடும் பெண்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. 1957 மக்களவைத் தேர்தலில் 45 பெண்களே போட்டியிட்டனர். இது கடைசியாக நடந்த 2024 தேர்தலில் 800 ஆக அதிகரித்தது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பூசி: நம்பிக்கைக்கான தருணம்!

அரசின் செயல்பாடுகளும் மக்களின் முழுமையான ஒத்துழைப்பும் ஒன்றிணைந்தால் இத்திட்டம் நிச்சயம் வெல்லும்



கு.கணேசன்
பொதுநல மருத்துவர்,
தொடர்புக்கு: gganesan95@gmail.com

கருப்பை வாய்ப் புற்றுநோய் தொடர்பாக, 'இந்து தமிழ் திசை'யின் கருத்துப்பேழை பகுதியில் 'கவனம் கோரும் கருப்பை வாய்ப் புற்றுநோய்' (7 மார்ச் 2024) என்னும் கட்டுரையை எழுதியிருந்தேன். அதில், 'பதின்பருவப் பெண்கள் அனைவருக்கும் கருப்பை வாய்ப் புற்றுநோய்க்கான தடுப்பூசி (HPV Vaccine) இலவசமாகக் கிடைப்பதை அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும். பெண்களுக்கான தடுப்பூசித் திட்டத்தில் இது சேர்க்கப்பட வேண்டும்' என்று கூறியிருந்தேன். இப்போது இது நடைமுறைக்கு வந்திருக்கிறது.

கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பூசியை 14 வயதான 1.15 கோடி பெண் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்குவதற்கான திட்டத்தை பிரதமர் மோடி பிப்ரவரி 28இல் தேசிய அளவில் தொடங்கிவைத்தார். முன்னதாக, ஜனவரி மூன்றாம் வாரத்தில் தமிழக அரசும் இதுபோன்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியது. முதல் கட்டமாகத் தமிழகத்தில் நான்கு மாவட்டங்களில் இது நடைமுறைக்கு வந்துள்ளது. இனி மற்ற மாவட்டங்களுக்கும் படிப்படியாக நடைமுறைக்கு வரும் என்று அரசு அறிவித்துள்ளது. மக்கள் பெரிதும் வரவேற்க வேண்டிய முன்னெடுப்பு இது.

**எச்சரிக்கும் புள்ளிவிவரம்**

உலகளாவிய புற்றுநோய் ஆய்வகம் (GLOBOCAN) 2022இல் கொடுத்துள்ள தரவின்படி, இந்தியாவில் 35 முதல் 44 வயதுக்கு உட்பட்ட பெண்களிடம் காணப்படும் புற்றுநோய்களில் கருப்பை வாய்ப் புற்றுநோய் இரண்டாம் இடத்தில் இருக்கிறது. இந்தியாவில் ஆண்டுதோறும் 1,20,000 பெண்கள் புதிதாக இந்த நோயால் பாதிக்கப்படுவதும், 80,000 பேர் இதனால் உயிரிழப்பதும் தெரியவந்திருக்கிறது. தமிழ்நாட்டில் 2023இல் மட்டும் 8,534 பெண்கள் இந்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்ததாக மத்திய அரசு அறிவித்திருந்தது.

பெண்களுக்குக் கருப்பை வாய்ப் பகுதியில் 'மனித பாப்பிலோமா வைரஸ்' (Human Papilloma Virus - HPV) தொற்றுவதுதான் கருப்பை வாய்ப் புற்றுநோய்க்கு முதன்மைக் காரணம். நவீன மருத்துவத்தின் அருங்கொடை 'ஹெச்பிவி தடுப்பூசி'. புற்றுநோய்க்குத் தடுப்பூசி இருக்கிறதென்றால், அது கருப்பை வாய்ப் புற்றுநோய்க்குத்தான் பெரிதும் பொருந்தும். அதனால்தான் இதைத் தடுத்தே ஆக வேண்டும் என்று உலகச் சுகாதார நிறுவனம் வலியுறுத்துகிறது.

**அரசுத் திட்டங்கள்**

கருப்பை வாய்ப் புற்றுநோயை 2030க்குள் ஒழிப்பதற்கு 2020இல் 'கருப்பை வாய்ப் புற்றுநோய் ஒழிப்பு முன்னெடுப்பு' (Cervical cancer elimination initiative) என்னும் திட்டத்தை உலகச் சுகாதார நிறுவனம் நடைமுறைப்படுத்தியது. அதன்படி, ஒவ்வொரு நாட்டுக்கும் 90/70/90 என்னும் இலக்கு நிர்ணயித்தது. அதாவது, 90% பதின்பருவப் பெண்களுக்கு 'ஹெச்பிவி தடுப்பூசி' செலுத்தப்பட வேண்டும்; 70% பெண்களுக்கு 35 வயதுக்குள் 'பாப் ஸ்மியர்' (Pap smear) என்னும் கருப்பை வாய்ப் புற்றுநோயை முன்கூட்டியே அறிய உதவும் பரிசோதனையை மேற்கொண்டுவிட வேண்டும்; 90% பெண்களுக்குத் தொடக்கத்திலேயே இந்தப் புற்றுநோயைக் குணப்படுத்திவிட வேண்டும்.

இதன் முதல்படியாக, கார்டாசில்-4 (Gardasil–4) என்னும் தடுப்பூசி தேசிய அளவில் இப்போது வழங்கப்படுகிறது. பொதுவாக, 'ஹெச்பிவி தடுப்பூசி' குறைந்தது இரண்டு தவணைகள் செலுத்தப்படுவது உண்டு. ஆனால், கார்டாசில்-4 தடுப்பூசியை ஒரு தவணை மட்டும் செலுத்திக்கொண்டால் போதும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்தத் தடுப்பூசி 93 – 100% 'மனித பாப்பிலோமா வைரஸை' எதிர்ப்பதாகச் சோதனை முடிவுகள் உறுதிப்படுத்தியுள்ளதால், இந்திய மருந்து ஒழுங்குமுறை வாரியம் (India's drug regulator) ஒரு தவணைத் தடுப்பூசிக்கு அனுமதி அளித்துள்ளது. உலகச் சுகாதார நிறுவனமும் இதை ஒப்புக்கொண்டுள்ளது.



ஏஐ - மாதிரிப் படம்

அதேவேளை, தமிழக அரசு வழங்கி வருகிற 'ஹெச்பிவி' தடுப்பூசித் திட்டத்தில் செர்வாவாக் (CERVAVAC) தடுப்பூசி பயன்படுத்தப்படுகிறது. இது ஓர் இந்தியத் தயாரிப்பு. இதை இரண்டு தவணைகளில் செலுத்திக்கொள்ள வேண்டும். அதாவது, முதல் தவணைக்குப் பிறகு 6 மாதங்கள் கழித்து, இரண்டாவது தவணையைச் செலுத்திக்கொள்ள வேண்டும் (0, 6). இப்போதைக்கு இது 14 வயதான பெண் குழந்தைகளுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. படிப்படியாக 9 - 14 வயதுவரை உள்ள பெண் குழந்தைகளுக்கும் இது வழங்கப்பட இருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

செர்வாவாக் தடுப்பூசியை 14 வயது வரைதான் வழங்க வேண்டும் என்பதில்லை. 15 வயதுக்கு மேல் உள்ள பெண்களுக்கும் வழங்கலாம். தனியார் மருத்துவமனைகளில் 15 - 26 வயதுக்குள் இருக்கிற பெண்களுக்கு இது வழங்கப்படுகிறது. தடுப்பூசித் தவணைகள் மட்டும் மாறும். இவர்களுக்கு மூன்று தவணைகள் வழங்கப்பட வேண்டும். முதல் தவணைக்குப் பிறகு இரண்டு மாதங்கள் கழித்து இரண்டாம் தவணையையும், 6 மாதங்கள் கழித்து மூன்றாம் தவணையையும் (0, 2, 6) செலுத்திக்கொள்ள வேண்டும்.

**தவணைகள் ஏன் வித்தியாசப்படுகின்றன?**

இந்த இடத்தில் உங்களுக்கு ஒரு சந்தேகம் தோன்றலாம். 'ஹெச்பிவி' தடுப்பூசிக்கு மட்டும் தடுப்பூசிக்குத் தகுந்தவாறு தவணைகள் ஏன் வித்தியாசப்படுகின்றன? காரணம், தடுப்பூசி தயாரிக்கப்படும் விதம், அதற்குப் பயன்படுத்திய கிருமி வகை, அது மனித உடலில் செயல்படும் முறை, அது நமக்குக் கொடுக்கும் தடுப்புத் திறன் அளவு எனப் பலதரப்பட்ட அம்சங்களை வைத்துத்தான் அந்தத் தடுப்பூசி எத்தனை தவணைகள் வழங்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்படுகிறது. மற்ற கிருமிகளைப் போலன்றி, 'ஹெச்பிவி' கிருமிகளில் 'ஹெச்பிவி' 6, 'ஹெச்பிவி' 11, 'ஹெச்பிவி' 16, 'ஹெச்பிவி' 18 எனப் பல துணைவகைகள் உண்டு. எந்தத் துணைவகைக்குத் தடுப்பூசி முக்கியத்துவம் தர வேண்டும் என்பதைத் தயாரிப்பு நிறுவனங்கள் முடிவுசெய்கின்றன.

இதன்படி அந்த நிறுவனங்கள் பரிந்துரைக்கும் தவணைகளில் தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. ஆள் ஒருவர்தான் என்றாலும் ஒல்லியானவர் என்றால் அவரைத் தூக்க ஒருவரே போதும். பருமனானவர் என்றால் இருவர் தேவைப்படுவார்கள் அல்லவா? அதுபோல்தான் கார்டாசில்-4, செர்வாவாக் ஆகிய தடுப்பூசிகளின் தவணைகள் தீர்மானிக்கப்பட்டன. அரசுகள் இவற்றை இலவசமாக வழங்குகின்றன. ஆகவே, அவரவர் வசதிப்படியும், வயதுப்படியும் இவற்றில் ஒன்றைச் செலுத்திக்கொள்ளலாம்.

**தடுப்பூசி ஒப்பந்தங்கள்**

'ஹெச்பிவி' தடுப்பூசித் திட்டம் வெற்றிபெற வேண்டுமானால், எல்லா ஊர்களிலும் தடுப்பூசி தங்குதடையின்றிக் கிடைக்க வேண்டும். தேசம் முழுவதிலும் தடுப்பூசி விநியோகத்துக்கும் பயன்பாட்டுக்கும் தகுந்த 'பாதுகாப்புச் சங்கிலி' (Cold Chain) அமைக்கப்பட வேண்டும். இதற்கு நிறையச் செலவாகும். ஆகவே, இந்திய அரசு உலகளாவிய தடுப்பூசிக் கூட்டணியான 'கேவி' (GAVI) அமைப்புடன் 3 வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது. 'கேவி' 2023இல் ரூ. 2,500 கோடி வழங்கியுள்ளது. தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு – பாதுகாப்பு (Tamil Nadu Women Employment and Safety (TNWESafe)) திட்டத்தில் இந்தத் தடுப்பூசித் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்துகிறது. ஐந்தாண்டுத் திட்டம் இது. இதற்கு உலக வங்கி ரூ.1,185 கோடி வழங்கியுள்ளது.

அரசு இயந்திரங்கள் முறைப்படி இதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கூடவே, மக்களின் முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் இந்தத் திட்டத்துக்குக் கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைத்துவிட்டால், கருப்பை வாய்ப் புற்றுநோய் இல்லாத தலைமுறையை இந்தியா உருவாக்கப்போவது உறுதி.